**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W. 17.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சேர்மசாமி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு விபத்து வழக்கு சம்பந்தமாக எங்கள் நிறுவன வாசலில் இருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை கொடுக்க வேண்டுமென்று போலீசார் கேட்டார்கள். நான் கண்காணிப்பு கேமரா பதிவுகளை காட்டினேன். போலீசார் ஒரு பென்ட்ரைவ் கொடுத்தார்கள். அதில் கண்காணிப்பு கேமரா பதிவுகளை பதிவு செய்து கொடுத்தேன். கண்காணிப்பு கேமரா பதிவுகளில் ஒரு லாரி எட்டையபுரத்திலிருந்து கோவில்பட்டி நோக்கி சென்றதாக பதிவாகியிருந்தது. லாரியில் SR என்று எழுதப்பட்டிருந்தது. கண்காணிப்பு கேமரா பதிவு சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் இருந்தது. கண்காணிப்பு கேமரா பதிவுகள் குறித்து நான் வழங்கிய சான்றிதழ் **அ.சா.ஆ 12**. 01.04.2024—ல் மேற்படி பதிவுகள் பதிவாகியிருந்தது. அதை 04.04.2024 அன்று போலீசார் கேட்டார்கள். 04.04.2024 அன்று மேற்படி பதிவுகளை பென்ட்ரைவில் பதிவு செய்து கொடுத்தேன். அ.சா.ஆ 12 ஆவணம் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி

விபத்து கொலை வழக்கு என்று செய்தித்தாள் பார்த்து தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸ் விசாரணையில் மேற்படி விபத்து கொலை வழக்கு என்பதை செய்தித்தாள் பார்த்து தெரிந்து கொண்டதாக போலீஸ் விசாரணையில் சொன்னேன். ஆய்வாளர்தான் என்னை விசாரித்தார். கண்காணிப்பு கேமரா பதிவுகளை என்னிடமிருந்து வாங்கியதும் அவர்தான். நான் பணி செய்யும் நிறுவனம் நிறுவன சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம். எங்கள் நிறுவனத்திற்கு வருகைப் பதிவேடு உண்டு. ஒரு நிறுவனத்தில் பணி செய்ய வேண்டுமென்றால் பணி நியமன உத்தரவு கொடுக்கப்பட வேண்டுமென்றால் சரிதான். எனக்கு பணி நியமன உத்தரவு இல்லை. மேற்படி நிறுவனத்தில் எனக்கு அடையாள அட்டை வழங்கப்படவில்லை. எனக்கு என்ன பணி வழங்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆவணமும் இல்லை. என் வாக்குமூலத்தின்படி நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை பராமரிப்பது மட்டும்தான் என் பணி. எங்கள் நிறுவனத்திற்கு மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர்களின் குழுமம் (Board of Directors) இருக்கிறார்கள். கண்காணிப்பு கேமரா பதிவுகள் என்பது ஒரு நிறுவனத்தில் நடக்கும் நிகழ்வுகளையும், தவறு ஏதேனும் இருந்தால் அதை கண்டுபிடிப்பதற்கும் நிறுவனத்தின் தலைமையால் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் உபகரண அமைப்பு என்றால் சரிதான். கண்காணிப்பு கேமரா பதிவுகள் பதிவாகியிருக்கும் சர்வர் அறை பூட்டப்பட்டிருக்கும் என்றும், அந்த அறை தலைமை அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளை எடுத்துக் கொடுப்பதற்கு எனக்கு தலைமை அதிகாரியின் உத்தரவு வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

காவல்துறையிலிருந்தும் மேற்படி பதிவுகளை எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்படவில்லை. மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளை பென்ட்ரைவில் பதிவு செய்து கொடுத்தது பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால் அதை நான்தான் பதிவு செய்து கொடுத்தேன். எங்கள் நிறுவனத்தில் Log Book உண்டு. அதில் யார் யார் நிறுவனத்திற்கு வருகிறார்கள், எத்தனை மணிக்கு வருகிறார்கள், என்ன என்ன பொருள் கொண்டு வருகிறார்கள் மற்றும் எத்தனை மணிக்கு வெளியே போகிறார்கள் என்பது குறித்து பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். நான் கணினி நிபுணர் அல்ல. என் கல்வித் தகுதி பி.காம். எங்கள் நிறுவனத்தில் கணினியை இயக்குவதற்கு தனி ஊழியர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ 12 சான்றிதழை என்ன வகைக்கு எதன் அடிப்படையில் நான் வழங்கினேன் என்பது எனக்கு தெரியாது. என் சாட்சியம் பற்றி நீதிமன்றத்திற்கு வந்தபிறகுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். குறிப்பிட்ட சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிக்க வேண்டுமென்று போலீசார் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ 12 எங்கள் அலுவலகத்தில் தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி கையொப்பம் கேட்டதால் நான் அ.சா.ஆ 12-ல் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். நான் மேற்படி நிறுவனத்தில் எந்தஒரு வேலையிலும் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு பணி நியமன உத்தரவும், அடையாள அட்டையும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க ஆய்வாளர் முருகன் என்னை தொடர்பு கொண்டு அழைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆய்வாளர் முருகன் தற்போது எட்டையபுரத்தில் இல்லை என்றும், வேறு மாவட்டத்திற்கு

சென்றுவிட்டார் என்றும் சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை மற்ற எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.07.10 19:21:07 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.